

அரியலூர் மாவட்டம், தா.பழூர் மேற்கு ஒன்றிய கழக முன்னாள் செயலாளர் மறைந்த வா.செளந்தர்ராஜன் அவர்களின் மகன் கார்த்திக் லெனினா திருமணத்தை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார்.
உடன் தா.பழூர் மத்திய ஒன்றிய கழக பொறுப்பாளர் அண்ணா துரை,தா.பழூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் தனவேல், அரியலூர் மத்திய ஒன்றிய கழக பொறுப்பாளர் தெய்வ. இளையராஜா, உள்ளிட்ட மாவட்ட,ஒன்றிய,நகர பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் பலரும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் நல்லாசிகளுடனும், செயல்படுத்தப்படும் உன்னதமான பல திட்டங்களில் ஒன்றான 'நான் முதல்வன்' திட்டத்தின் வாயிலாக உறைவிட வசதியோடு தரப்பட்ட தரமான பயிற்சியின் மூலமாக பயின்று, வங்கி போட்டித் தேர்வில் வெற்றி பெற்ற கரூர் மாவட்டம் காக்காவாடியைச் சேர்ந்த திவ்யாவை, கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. பாராட்டி வாழ்த்து தெரிவித்தார்.

### கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு சிறப்புரை!

# புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயற்குழ கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் -அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!

புதுக்கோட்டை,மே21-

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், கனிம வளங்கள் மற்றும் கரங்கத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :



புதுக்கோட்டை புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயற்குழு கூட்டம் இன்று (21,05.2025 - புதன்கிழமைஸ்ரீ காலை 10 மணியளவில் புதுக்கோட்டை மாலையீடு கற்பக விநாயகா (ஏசி) திருமண மஹாலில் நடைபெறுகிறது. கழக முதன்மை செயலாளரும், நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சருமான கே.என்.நேரு கழக வளர்ச்சி பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட அவைத் தலைவர் அ. சுப்பிரமணியன் தலைமை வகிக்கிறார்,

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லபாண்டியன், மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்வுகளில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தொகுதி பொறுப்பாளர்கள், ஒன்றிய , நகர ,பேரூர் கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள்,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 2026 சட்டமன்ற தேர்தல் பணி சம்பந்தமாக

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

### அமைச்சர் எ.வ. வேலு தலைமையில்

# ஒருங்கிணைந்த சேலம் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

### அமைச்சர் இரா. இராஜேந்திரன் - டி.எம்.செல்வகணபதி எம்.பி.- எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிவிப்பு!

சேலம், மே 21-

சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் - அமைச்சர் இரா. இராஜேந்திரன், சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் டி.எம். செல்வகணபதி, சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-







சேலம் கிழக்கு, சேலம் மத்திய, சேலம் மேற்கு மாவட்ட கழகங்களின் செயற்குழு கூட்டம் 26.05. 2025 அன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு சேலம் 5 ரோடு கே.எம்.பி. திருமண மண்டபத்தில் கழக உயர் நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் எ.வ.வேலு தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு மூன்று மாவட்ட கழகங்களின் நிர்வாகிகள், சேலம் மாநகர கழக நிர்வாகிகள், மூன்று மாவட்டங்களில் உள்ள தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர கழக, ஒன்றிய கழக, பகுதி கழக, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்டக் கழக பிரதிநிதிகள் அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட,

மாநகர அமைப்பாளர்கள் மற்றும் சேலம் மாவட்டத்தில் உள்ள அணிகளின் மாநில துணைச் செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

இக்கூட்டத்தில் சட்டமன்றத் தேர்தல் பணிகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

இவ்வாறு அவர்கள் தங்களது அறிக்கையில் கூறியுள்ளனர்.



திருவாரூர் நகரப்பகுதியில் T.860 TCCWS சார்பில் புதிதாக அமைக்கப்பட்ட ஆவின் பாலக விற்பனையகத்தை மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ திறந்து வைத்தார், மாவட்ட ஆட்சியர் மோகனச்சந்திரன் , நகர செயலாளர் வாரை. எஸ். பிரகாஷ் , கழக பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில் , நகர்மன்ற உறுப்பினர் எஸ்.என்.அசோகன் மற்றும் அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்

### தே.மதியழகன் எம்.எல்.ஏ. தலைமை!

### டி.செங்குட்டுவன் - இ.ஜி.சுகவனம் பங்கேற்பு!

# கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் தொகுதி வாரியாக பார்வையாளர்கள் கூட்டம்!

### அமைச்சர் அர.சக்கரபாணி சிறப்புரை!

கிருஷ்ணகிரி, மே 21-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் இளம் தலைவர் அவர்களது ஆலோசனையின்படியும் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சட்டமன்றத் தேர்தல் 2026 கிருஷ்ணகிரி, பர்கூர், ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதி வாரியான பார்வையாளர்கள் ஆலோசனைக் கூட்டம் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் தலைமையில் கிருஷ்ணகிரியில் நடைபெற்றது

இந்தகூட்டத்தில் தமிழ்நாடு உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சரும், கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சரும், சட்டமன்ற தேர்தல் மண்டல பொறுப்பாளருமாண அர.சக்கரபாணி அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றியதாவது :-

தமிழ்நாட்டில் கடந்த 4 ஆண்டு தி.மு.க. ஆட்சியில், பல்வேறு சாதனைகள் செய்யப்பட்டுள்ளன. மகளிர், மாணவர்கள், இளைஞர்களுக்கு என ஏராளமான திட்டங்கள் கிடைத்துள்ளன. தற்போது கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கிடைக்காத தகுதி உள்ளவர்களுக்கு வழங்கிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். நிர்வாகிகள் அனைவரும் ஒற்றுமையுடன் கட்சி பணியாற்ற வேண்டும். அவ்வாறு செய்தால் நாம் அதிக இடங்களில் வெற்றிபெற முடியும். சட்டமன்ற தேர்தல் தொடர்பாக கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த ஊத்தங்கரை, பர்கூர், கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதிகளை சேர்ந்த நிர்வாகிகள் வாக்காளர்களை வீடு, வீடாக சென்று நேரில் சந்தித்து கடந்த நான்காண்டுகளாக கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் செய்யப்பட்ட மக்கள் நலத் திட்டங்களான மகளிர் உரிமைத் தொகை, மகளிர் அரசு பேருந்தில் கட்டணம் இல்லா பேருந்து பயணம், கல்லூரி மாணவிகளுக்கு புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டங்கள் மூலமாக மாணவ, மாணவிகளை உயர்கல்வி படிக்க வைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுத் துள்ளது. மேலும், அரசின் வேலை வாய்ப்பு மையங்களில் படித்து படித்து பலரும், பலரும்.. அரசு வேலை வாய்ப்புகளை பெற்றுள்ளனர். 18 முதல் 25 வயதிற்கு உட்பட்ட இளைய தலைமுறையினரை தி.மு.க. பக்கம் அழைத்துவர வேண்டும். வீடுகள் தோறும் சென்று திமுக அரசின் சாதனைகளை எடுத்து கூறி 2026 சட்டமன்ற தேர்லில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட் டத்தில் உள்ள 3 சட்டமன்ற தொகுதிகளிலும் திமுக கூட்டணி வெற்றி பெற பாடுபட வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார். தொடர்ந்து கிருஷ்ணகிரி, பர்கூர், ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதி தி.மு.க. மண்டல பொறுப்பாளர்களுக்கு அமைச்சர் ஆலோசனைகளை வழங்கினார்.

இந்த கூட்டத்தில் மாநில அமைப்புசாரா ஓட்டுநர் அணி செயலாளர் டி.செங்குட்டுவன், மாநில சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் இ.ஜி.சுகவனம், மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், மாநில விவசாய அணி துணை செயலாளர் டேம்.வெங்கடேசன், மாநில மகளிர் ஆணைய குழு உறுப்பினர் மாலதி நாராயணசாமி, மாநில வார்த்த அணி துணை செயலாளர் கேவிஎஸ். சீனிவாசன்,

சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் ரமேஷ், தேவகுமார், முனிவேல்,

மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசுமூர்த்தி, சந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் செந்தில்,கிருபாகரன் பொதுக்குழு உறுப்பினர்கள் பாலன், நாகராசன், சித்ரா சந்திரசேகர்,கோதண்டன், கிருஷ்ணகிரி நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேல்மணி ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன், தனசேகரன், ராஜேந்திரன், அறிஞர், மகேந்திரன், தேங்காய் சுப்பிரமணி. சரவணன், சாந்தமூர்த்தி, குண, வசந்தரசு, நரசிம்மன், எக்கூர். செல்வம், குமரேசன், ரஜினி செல்வம், பேரூர் செயலாளர்கள் தம்பிதுரை, வெங்கட்டப்பன், பேரூர் கழக பொறுப்பாளர்கள் பார்த்திபன், சாஜித் மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள் , துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சேலம் மத்திய மாவட்டம் சேலம் வடக்கு ஒன்றியதி.மு.க சார்பில் கழக அரசின் நாடு போற்றும் 4ம் ஆண்டு சாதனைகள் அடங்கிய புத்தகத்தை ஒன்றிய கழக செயலாளர் ரெயின்போ நடராஜன் வீடு வீடாகச் சென்று வழங்கினார். உடன் நிர்வாகிகள் இருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆர்.டி. சீத்தாபதி

### மே 21 (2019)



கழகம் துவக்கிய காலத்திலேயே தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியதோடு, ஒன்றுபட்ட சென்னை மாவட்ட துணைச் செயலாளராகவும் – பின்னர் தொடர்ந்து இரு முறை மாவட்டச் செயலாளராகவும் – தலைமை நிலைய அலுவலகச் செயலாளராகவும் – சொத்து பாதுகாப்புக்குழு துணைத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர். தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் பதவி வகித்தவர்.

கழகப் பொதுக்கூட்டம் என்றாலும் – ஊர்வலம், பேரணி என்றாலும் – தலைமைக் கழகம் அறிவிக்கும் போராட்டம், ஆர்ப்பாட்டங்களென்றாலும், அப்போது அத்தனை எளிதாக நடத்திட முடியாது. எதிர்ப்பு – கடுமையான ஆயுத வன்முறை போன்றவற்றை முறியடித்து காவல்துறையின் ரகசிய இலாகாவே அஞ்சிடும் வகையில் இவர் திட்டங்கள் வகுத்து அனைத்திலும் வெற்றிகரமான செயல்படுத்தி காட்டியவர் இவர்.

இந்தியக் குடியரசுத் தலைவர் இராஜேந்திரபிரசாத், பிரதமர் நேரு ஆகியோருக்குக் கறுப்புக் கொடி போராட்டம் – விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம் – கைலாசம் கமிஷனை எதிர்த்து நடைபெற்ற போராட்டம் – இலங்கைத் தமிழர்களின் வாழ்வுரிமைப் போராட்டம் மற்றும் நெருக்கடிகால மிசா சட்டத்தில், சென்னை மத்திய சிறையிலும் – பாளையங்கோட்டைச் சிறையிலுமாக ஓராண்டு மிசா சிறைவாசம் அனுபவித்தவர்.

2012ல் நடைபெற்ற முப்பெரும் விழாவில் கழகத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இவருக்கு "கலைஞர் விருது" வழங்கி சிறப்பித்தார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சைதை இரா. லோகநாதன்

### மே 21 (2015)



இளமை பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு சென்னை, சைதை பகுதிக் கழகத்தில் வட்டச் செயலாளராகவும் – பகுதி துணைச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக கழகத்தின் சார்பில் வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

சைதை கூட்டுறவு வங்கி இயக்குநராக பொறுப்பு வகித்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம், சட்ட நகல் எரிப்பு போராட்டம் என கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.